**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 522/2023**

**Prosecution witness : அ.சா.7** **Date : 05.12.2024**

| Name : பிரபு | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேச்சேரி காவல் நிலையத்தில் காவல் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2023-ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்த போது, கடந்த 10.08.2023 ம் தேதி காலை 08.15 மணிக்கு சேலம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கு முன்பாக குற்றஎண். 440/2023 சாலை விபத்து சம்மந்தமாக காவல் ஆய்வாளர் சண்முகம் அவர்கள் வளர்மதி என்பவருடைய பிரேதத்தை என்னிடம் ஒப்படைத்து இறப்பின் உண்மைத் தன்மையை அறியவேண்டி, சடலக்கூறாய்வு செய்தற்கு முன்பு மருத்துவர் முன்பு அடையாளம் காட்ட பணித்தார்.

2) நான் அன்றைய தினம் பகல் 02.00 மணிக்கு மருத்துவர் கோகுலரமணன் அவர்களிடம் சடலத்தை அடையாளம் காட்டி ஒப்படைத்து பிரேத பரிசோதனை முடிந்த பின்னர் உறவினர் வசம் நல்லடக்கம் செய்வதற்காக ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தனர்.

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை-** இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.